DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அனுஷ்கா | **கணவர் பெயர்** | : | மகேந்திரன் |
| **ஊர்** | : | ஊழியபத்து | **தாலுக்கா** | : | காரைக்கால் |
| **ஜாதி** | : | -- | **வயது** | : | 10 |
| **மதம்** | : | -- | தொழில் | : | மாணவி |

நாள் 19.07.2022

நீதிமன்ற கேள்வி

கேள்வி : உன் பெயர் என்ன?

பதில் : அனுஷ்கா

கேள்வி : உன் அப்பா பெயர் என்ன?

பதில் : மகேந்திரன்

கேள்வி : உன் வயது என்ன?

பதில் : 10

கேள்வி : நீ என்ன செய்கிறாய்?

பதில் : நான் 6ம் வகுப்பு நிர்மலா ராணி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறேன்

கேள்வி : இது எந்த இடம் என்று தெரியுமா?

பதில் : இது கோர்ட்

கேள்வி : உனக்கு உண்மை எது, பொய் எது என்று தெரியுமா?

பதில் எது உண்மை, பொய் என்று எனக்கு தெரியும். பொய் சொல்ல கூடாது.

சாட்சி மேலே கண்ட கேள்விகளுக்கு அளித்துள்ள பதில்களில் இருந்து அவர் சாட்சியமளிக்க தகுதி படைத்தவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

எனது அப்பா இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியும். நான், எனது அப்பா, அக்கா கோமதி உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்றோம். அங்கிருந்து வந்தவுடன், அப்பா எங்களை வீட்டில் விட்டு விட்டு ஒரு அரைமணி நேரம் கழித்து எங்களுக்கு ரத்தப்பொரியல் வாங்கி வந்தார். அதை நானும் , எனது அக்காவும் சாப்பிட்டோம். அம்மா கொல்லையிலிருந்து வந்து ஏது ரத்தப் பொறியல் என்று கேட்டபோது, நாங்கள் அப்பா வாங்கி வந்தார் என்று சொன்னோம், அதற்கு என் அம்மா உன் அப்பா இன்று சாகபோகிறான என்றும், அதனால் தான் உங்களுக்கு ரத்தபொறியல் வாங்கி கொடுத்திருக்கிறான் என்று சொன்னார். ஆஜர் 2வது எதிரி எனது அம்மா. ஆஜர் 1வது எதிரியை தெரியும். அப்பா இல்லாத நேரத்தில் ஆஜர்1 வது எதிரி எங்கள் வீட்டிற்கு வருவார். அவர் வரும்போது எனது அம்மா எனக்கும், எனது அக்காவுக்கும் விளையாட்டு ஜாமான்கள் கொடுத்து வீட்டிற்கு வெளியே விளையாட சொல்வார். அப்பா வந்தால் ரூம் கதவை தட்டு என்று சொல்லுவார்கள். சொல்லிவிட்டு அம்மாவும், ஹரிஹரனும் ரூமை சாத்திவிட்டு 1 மணிநேரம் 1.30 மணிநேரம் கழித்து தான் வருவார்கள். வந்ததும் சுற்றிலும் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பார். அப்பா இறந்த அன்று வந்து காவல் அதிகாரிகள் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பு)</u>

எங்கள் வீடு கூரை வீடுதான். அங்கு ரூம்கள் கிடையாது. அந்த கூரை வீடு குட்டியாக இருக்கும். அப்பா வந்தால் ரூம் கதவை தட்டு என்று எனது அம்மா சொல்லியதாக நான் போலீஸ விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அம்மா ரூமை விட்டு வெளியே வந்து சுற்றி யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பார் என்று போலீஸ விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு நான் சொல்வது

போல் ஹரிஹரன் வரமாட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. மனோரன் எனக்கு பெரியப்பா. சுப்புலட்சுமி எனது பெரியம்மா. நான் பெரியப்பா, பெரியம்மா பாதுகாப்பில் இருந்து வருகிறேன். பெரியப்பா மனோரனும், ஈஸ்வரி என்ற மற்றொரு பெரியம்மாவும் இன்று நீதிமன்றம் வந்துள்ளார்கள். அவர்கள்தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள். பெரியப்பாவும், பெரியம்மாவும் சொல்லி கொடுத்ததை நான் மனப்பாடம் செய்து நீதிமன்றத்தில் ஒப்புவிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)**

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | கணவர் பெயர் : | தங்கையன் |
| ஊர் | : காக்காமொழி | தாலுக்கா | : காரைக்கால் |
| ஜாதி | : -- | வயது | : 47 |
| மதம் | : -- | தொழில் | : விவசாய கூலி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.07.2022.

**முதல் விசாரணை**

நான் காரைக்கால் மாவட்டத்தில், காக்காமொழி என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் தினமும் மாலை வேலை முடித்து சாராயம் குடிப்பேன். சாராயம் குடிக்க காக்காமொழி சாராய கடைக்கு செல்வேன். அங்கு பக்கத்து கிராமம், வெளிகிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம் சாராயம் குடிக்க வருவார்கள். அங்கு சாராயம் குடிக்க வருபவர்களை எனக்கு தெரியும். ஆஜர் 1 வது எதிரியை எனக்கு தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் மற்றும் மகேந்திரனும் ஆஜர் 1வது எதிரியும் எங்கள் தெருவுக்கு வருவார்கள். சில நேரம் ஆஜர் 1வது எதிரி மகேந்திரனுடன் சாராய கடைக்கு வருவார். 11.02.2018 அன்று இரவு 09.00 மணிக்கு மேல் மகேந்திரனும், ஆஜர் 1வது எதிரியும் சாராய கடைக்கு வந்து, சாராயம் வாங்கினார்கள். மகேந்திரன் குடித்தார் ஆனால் ஹரிஹரன் குடிக்கவில்லை. அவர்கள் இருவரும் அன்று அங்கிருந்து எனக்கு முன்னால் போய்விட்டார்கள். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(2ம் எதிரி தரப்பு)**

11.02.2018 அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. ஹரிஹரன் மற்றும் மகேந்திரன் இவர்கள் இருவரின் தகப்பனார் பெயர் தெரியும். 11.02.2018 அன்று யார் யாரெல்லாம் என்னுடன் சாராயம் குடித்தார்கள் என்று சொல்ல முடியாது. நான் சொல்வது போல் மகேந்திரனும், ஹரிஹரனும் அன்று சாராய கடைக்கு வரவும் இல்லை, நான் பார்க்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் அன்று சாராய கடைக்கு போகவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. போலீஸ் விசாரணையில் மகேந்திரனும், ஹரிஹரனும் அன்று சாராயம் வாங்கி

போனார்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி 2 மனோகரனிடம் நான் விவசாய வேலை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனோகரன் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார். மனோகரனும், போலீஸ்காரரும் சொல்லி கொடுத்து இந்த வழக்கின் முன்னேற்றத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)**

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெய்கணேஷ் | கணவர் பெயர் | : தங்கராஜ் |
| ஊர் | : காரைக்கால் | தாலுக்கா | : காரைக்கால் |
| ஜாதி | : -- | வயது | : 47 |
| மதம் | : -- | தொழில் | : சாராயக் கடை ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.07.2022.

**முதல் விசாரணை**

நான் காரைக்காலில் குடியிருந்து வருகிறேன். நான் நிரவி கொம்யூன் காக்கா மூடியில் உள்ள சாராயக்கடையில் விற்பனையாளராக வேலை பார்த்து வருகிறேன். நான் காலை 08.00 மணிக்கு வேலைக்கு போய்விட்டு இரவு 11 மணிக்குள் வீடு திரும்பிவிடுவேன்.. நான் சாராயக் கடையில் வேலை செய்வதால் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களுடன் எனக்கு பழக்கம் உண்டு. ஆஜர் 1 வது எதிரியை தெரியும். ஆஜர் 1 வது எதிரியின் நண்பரான மகேந்திரனை எனக்கு தெரியும். அவர்கள் எனது கடைக்கு சாராயம் குடிக்க வருவார்கள். 11.02.2018 அன்று சுமார் இரவு 09.30 மணிக்கு எனது கடைக்கு வந்து சாராயம் வாங்கி சென்றார்கள். மற்றவர்களை எனக்கு தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பு)**

சாராயக் கடையின் உரிமையாளர் வழக்கு சம்பவம் நடந்த சமயம் பூபதி ஆவார். நாங்கள் 2 பேரும் அந்த கடையில் வேலை செய்தோம். நாங்கள் எங்கள் பணியை மாற்றி மாற்றி வேலை செய்வோம் என்றால் சரிதான். 11.02.2018 அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. ஞாயிற்று கிழமை என்று நினைக்கிறேன். அன்று நான் கடையில் இல்லை என்றாலும், அதனால்தான எனக்கு கிழமை நியாபகம் இல்லை என்றாலும் சரியல்ல. என்னை 16.02.2018 அன்று போலீசார் என்னை விசாரித்தனார். ஹரிஹரனும், மகேந்திரனும் சாராயம் வாங்கி கொண்டு போனதாக நான் போலீசில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அன்றைய

தினம் கடைக்கு யார் யாரெல்லாம் வந்தார்கள், சாராயம் வாங்கி கொண்டு போனர்கள் என்று துல்லியமாக சொல்ல முடியாது. இந்த வழக்கிற்காக ஹரிஹரனும், மகேந்திரனும் வந்து சாராயம் வாங்கி கொண்டு போனார்கள் என்று போலீசார் சொல்லி கொடுத்ததன் பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் ஹரிஹரனும், மகேந்திரனும் சேர்ந்து ஏ்ங்கள் கடைக்கு வரவில்லை என்றாலும், சாராயம் எதுவும் வாங்கி போகவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.2 மனோகரன் எனது நண்பர் என்று சொன்னால் சரியல்ல, எனது ஊர்க்காரர். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். மனோகரனும், போலீசாரும் சொல்லி கொடுத்ததன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)**

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**

**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி | கணவர் பெயர் | : கார்த்தி |
| ஊர் | : ஊழியம்பத்து | தாலுக்கா | : காரைக்கால் |
| ஜாதி | : -- | வயது | : 37 |
| மதம் | : -- | தொழில் | : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.07.2022.

**முதல் விசாரணை**

நான் காரைக்காலில் ஊழியம் பத்து என்னும் ஊரில் வசித்து வருகிறேன். இறந்து போன மகேந்திரன் எனது கொழுந்தனார். அவரது மனைவி பெயர் கீதா. அவரது மனைவி ஆஜர் 2வது எதிரி. அவர்களுக்கு 2 பெண் குழந்தைகள். எனது கொழுந்தனார் குடிபழக்கம் உள்ளவர். குடித்துவிட்டு வீட்டில் வந்து அவரது மனைவியிடம் சண்டை போடுவார். அது எப்படி எனக்கு தெரியும் என்றால் நாங்கள் அவர்களின் பக்கத்து வீடுதான். இறந்து போன கொழுந்தனாருக்கு ஆஜர் முதல் எதிரியுடன் பழக்கம் இருந்தது. ஆஜர் 2வது எதிரிக்கும், 1வது எதிரிக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருந்தது. எனது கொழுந்தனார் வயலுக்கு தண்ணீர் இறைக்க 11.02.2018 இரவு 10.45 மணி அளவில் சென்றதாக கேள்விபட்டேன். 1வது எதிரியும் மகேந்திரனும் டீசல் வாங்கி கொண்டு வயலுக்கு சென்றார்கள். எனது கொழுந்தனார் வயல் வரப்பில் எரிந்த நிலையில் கிடப்பதாக கேள்விபட்டேன். அது சம்பந்தமாக எனக்கு 1வது எதிரி மீது சந்தேகம் இருப்பதாக ஆய்வாளரிடம் தெரிவித்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பு)**

11.02.2018ம் தேதி என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. அ.சா.3 எனது கணவர். அ.சா.2 எனது கொழுந்தனார். சாட்சி அனுஷா, எனது கொழுந்தனார் மனோகரன் வீட்டில் வளர்கிறது. இறந்துபோன எனது கொழுந்தனார் மகேந்திரன் வாய்க்கால் வரப்பில் இறந்து கிடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன மகேந்திரன் டி.வி.எஸ் எக்ஸல் வண்டி ஓட்டுவார். என்னுடைய கொழுந்தனார் மகேந்திரன் டி.வி.எஸ் எக்ஸலில் வரும்போது மதகில் மோதி காயம்பட்டுவிட்டார்

என்றும், டி.வி.எஸ் எக்ஸல் தானாக தீப்பிடித்ததால் அவருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னாலும் அது சரியல்ல. நான் கூறியது போல் மகேந்திரன், 2 வது எதிரி கீதாவிடம் சண்டைபோட மாட்டார் ராசியாக இருந்தார் என்று சொன்னாலும் அது சரியல்ல. இறந்து போன மகேந்திரனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்று சொன்னால் அது சரிதான். மகேந்திரனும், 1வது எதிரி ஹரிஹரனும் ஒன்றாக சேர்ந்து எந்த இடத்திற்கும் போக மாட்டார்கள் என்று சொன்னாலும் அது சரியல்ல. 1வது எதிரியும், மகேந்திரனும் டீசல் வாங்கி கொண்டு போனதை நேரடியாக நான் பார்க்கவில்லை ஆனால் சொன்னதை வைத்து தெரிந்துகொண்டேன். ஆனால் அந்த விவரத்தை யார் எனக்கு சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு நினைவில்லை. 2வது எதிரி, 1வது எதிரியுடன் கள்ளத்தொடர்பில் இல்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் கார்த்திகேசன் எனக்கு சொல்லிகொடுத்தபடி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக மாத கணக்கில் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் போலீசாரால் சொல்லி கொடுத்து வழக்கிற்கேற்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)</u>**

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை